மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

134—

சமுதாயக் கல்லூரிக்குக் கட்டடம்

***1553—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 55-வது வட்டத்திலுள்ள சமுதாயக் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டி, செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெருநகர சென்னை மாநகராட்சி, துறைமுகம் தொகுதி, 55-வது வட்டத்திலுள்ள சமுதாயக் கல்லூரியின் கட்டட வடிவமைப்பு நல்ல நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. இக்கல்லூரியில் புதிய பாடத் திட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 55-வது வட்டத்திலே நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவிலே 1997 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இயங்கி வந்த சமுதாயப் பயிற்சி நிலையமானது பெண்களுக்கென்று பயிற்சி அளித்து, அதிலே பயிற்சி பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகின்ற ஓர் அமைப்பாகச் செயல்பட்டது. தற்போது அந்த சமுதாயப் பயிற்சிப் பள்ளியே மூடப்பட்டிருக்கின்றது.

2018 ஜூன் 6]

அந்தப் பயிற்சி நிலையமானது வாழ்க்கையின் அடித்தட்டிலே இருக்கின்ற மக்கள், சாலையோரங்களிலே வசிக்கின்ற மக்கள், கூவம் ஆற்றோரங்களிலே வசிக்கின்ற மக்கள் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்திற்கும், அடிப்படைத் தேவைக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் பயன்பட்டு வந்தது. பெண்களின் நலனில் அக்கறை கொண்டு 1929 ஆம் ஆண்டு பெரியார் மனதிலே தைத்த முள்ளை எப்படி 1989 ஆம் ஆண்டு பெண்களுக்கு சொத்திலே சம உரிமை உண்டு என்று கலைஞர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தாரோ (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல சுமார் 97 கோடியே 70 இலட்சத்தில் 96,700 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி தந்த, சுழலும் நாயகன் எங்கள் தளபதியின் வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் முன்னேற்றத்திற்கு அந்தச் சமுதாயக் கல்லூரியை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே என்னுடைய வேண்டுகோளை வைக்கின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வினா, துறைமுகம் தொகுதி, 55 ஆவது வட்டத்திலுள்ள சமுதாயக் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டி மீண்டும் செயல்படுத்தப்படுமா, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதுதான். பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் மண்டலம் 9-ல், 2 சமுதாயக் கல்லூரிகளும், மண்டலம் 5-ல், 2 சமுதாயக் கல்லூரிகளும், மண்டலம் 4 மற்றும் 8-ல், தலா ஒரு சமுதாயக் கல்லூரியும் என மொத்தம் 6 சமுதாயக் கல்லூரிகள் உள்ளன. இந்தச் சமுதாயக் கல்லூரிகள் 1999 ஆம் ஆண்டிலும், 2010 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டு, இயங்கி வந்தன. தற்போது மண்டலம் 9-ல், வார்டு எண் 123 மற்றும் 8-வது மண்டலம், 104-வது வார்டில் சமுதாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, 55-வது வட்டத்தில் உள்ள சமுதாயக் கல்லூரிக்கான கட்டடம் 1949 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்தச் சமுதாயக்

கல்லூரி, 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்பட்டு, முக்கிய பயிற்சியாக மாணவ, மாணவியருக்கு மென் பொம்மைகள் தயாரிப்பு (Soft Toy Making Course) என்ற 3 மாத குறுகிய கால பயிற்சி வகுப்பு 2015-2016 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இதுவரையில் இந்த சமுதாயக் கல்லூரியில் மொத்தம் 668 மாணவ, மாணவிகள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்தச் சமுதாயக் கல்லூரிக் கட்டடத்தின் வடிவமைப்பு நல்ல நிலையில் உள்ளது. எனவே, இங்கே புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை. 2016-2017 ஆம் ஆண்டில், மேற்படி பயிற்சியின்மீது மாணாக்கர்களுக்கு புரிதல் இன்மை காரணமாகவும், ஆர்வம் இல்லாததாலும் மற்றும் பயிற்சியின் பயன்பாட்டினை அறியாததாலும், போதிய சேர்க்கை இல்லாததாலும் அங்கே பயிற்சி வகுப்புகள் நிறுத்தப்பட்டுள்ளன. 2018-2019 ஆம் கல்வி ஆண்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேற்படி சமுதாயக் கல்லூரியில் தொடர்ந்து புதிய குறுகிய காலப் பயிற்சி வகுப்புகள் நடத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது. உரிய விளம்பரங்கள் செய்து, மாணாக்கர்களைச் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய துறை தொடர்பான மானியக் கோரிக்கையின் மீதான அறிவிப்பில் இரண்டாவது அறிவிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அடிக்கடி கேட்கும் யானைகவுனி பாலம் குறித்து உள்ளது. அதேபோல் இந்தப் பிரச்சினையும் கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு.பி.கே.சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்போது நாங்கள் இல்லாவிட்டாலும், அந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் முழுவதையும் படித்துப் பார்த்தோம். பக்கம் 23-ல், NCVT திட்டத்தின்கீழ் Vocational Training Course-ஐ துவக்குவதாக நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். மண்டலம் 9-ல் அது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நாங்கள் மண்டலம் 5-க்குக் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கின்ற அந்தக் கட்டடமானது மேயராக திரு. ராமசாமி அவர்கள் இருந்தபோது 1949 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். சுமார் 20

2018 ஜூன் 6]

வகுப்பறைகள் மூடியே கிடக்கின்றன. நேற்று இரவுகூட நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தேன். எந்தவிதமான செயல்பாடும் இல்லை. குற்றச்சாட்டு அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்துகொள்ளலாம். திரு. பக்தவத்சலம் அவர்கள் 1954 ஆண்டு ஒரு துவக்கப் பள்ளியைத் துவக்கியிருக்கின்றார். அந்தப் பள்ளிக்கு 8 வகுப்பறைகள் உள்ளன. அவையும் மூடப்பட்டிருக்கின்றன. இதை ஏன் குறிப்பிடுகிறேனென்றால், கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 202-ல், 5,788 பேர்தான் இந்த ஆண்டு +2 தேர்வை எழுதியிருக்கிறார்கள் என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இப்படிப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டு வருவதால், தமிழகத்தில் ஒரு கோடிக்கும் மேலாக மாணவ, மாணவியர்கள் படிக்கின்றபோதும் அதிகபட்சம் 5,000 பேர்தான் +2 தேர்வை மாநகராட்சிப் பள்ளிகளின் வாயிலாக எழுதுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற கட்டடங்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, போதிய ஆசிரியர்களை நியமித்து, விளம்பரம் செய்து, இந்த மாநகராட்சிப் பள்ளிகளைத் தரம் வாய்ந்ததாகச் செயல்படுத்தினால், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வசிக்கின்ற மக்களின் கல்வியாதாரத்திற்கு அது உறுதுணையாக இருக்கும். தனியார் பள்ளிகளிலே அதிகக் கட்டணம் செலுத்தி, பெற்றோர்களுடைய வருவாய் முழுவதும் கல்விக்கே செலவிடுகின்ற ஒரு நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த வகுப்புகளுக்கு போதிய ஆசிரியர்களை நியமித்து, மீண்டும் இந்தக் கல்வி நிலையத்தைத் தொடங்குவதற்குண்டான முயற்சியை அரசு எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருக்கின்ற, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சருடைய தொகுதியில்கூட மண்டலம் 5 வருகிறது. எப்படி அவருடைய தொகுதிக்கு சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ, அதே அளவுகோலில் துறைமுகம் தொகுதிக்கும் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜூன் 6

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அனைவருக்கும் ஒரேமாதிரியான சலுகைகளைத்தான் எப்பொழுதும் கொடுக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே வழியில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் கேட்ட கேள்வியான சமுதாயக் கல்லூரியிலிருந்து, பள்ளிக் கல்விக்குச் சென்றிருக்கிறார். இன்றைக்கு சென்னை மாநகராட்சி, பல்வேறு துறைகளில் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. துறைமுகம் தொகுதியிலே, பெருநகர சென்னை மாநகராட்சியில் பள்ளிக் கல்வித் துறை சார்பாக 281 பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள், 32 மேல்நிலைப் பள்ளிகள், 200 மழலையர் பள்ளிகளில் மொத்தம் 85,910 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். சென்னையைப் பொறுத்தளவிற்கு மாநகராட்சிப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. கடந்த முறை 2016-2017 ஆம் ஆண்டில், பன்னிரெண்டாம் வகுப்பில் மாணவ, மாணவியர்கள் 88.70 சதவிகிதம் தேர்ச்சி பெற்றார்கள். அதற்குப் பிறகு 2017-2018 ஆம் ஆண்டில் 88.79 சதவிகிதம் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். கூடுதலாகத்தான் தேர்ச்சி சதவிகிதம் உள்ளது. அதேபோல, 10 ஆம் வகுப்பில் 2016-2017 ஆம் ஆண்டில் 93.10 சதவிகிதம் தேர்ச்சி; இந்த வருடம் 93.36 சதவிகிதம் தேர்ச்சி; ஆகவே, கூடுதலாகத்தான் தேர்ச்சி சதவிகிதம் உள்ளது. இன்றைக்கு சென்னை மாநகராட்சியில் இருக்கக்கூடிய பள்ளிக் கல்வித் துறை சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. மேலும், 10 ஆம் வகுப்பில் 450 மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் 40 பேர். 400 மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் 416 பேர். 100-க்கு 100 மதிப்பெண் பெற்றவர் ஒரு நபர். அதேபோல, +2-ல் எடுத்துக்கொண்டோம் என்றால், சென்னையில் 2017-2018 ஆம் ஆண்டில் 5,788 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினார்கள். இதில் தேர்ச்சி பெற்றவர்கள் 5,139 மாணவர்கள். தேர்ச்சி விகிதம் 88.79 ஆகும். இது கடந்த ஆண்டைவிட 0.09 சதவிகிதம் அதிகம் ஆகும்.

2018 ஜூன் 6]

அதேபோல, பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் 200-க்கு 200 மதிப்பெண் பெற்றவர்கள் 69 பேர். 1,100 மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் 74 பேர். அதேபோல, 1,000 மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் 326 பேர். 3 பள்ளிகளில் மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள், கடந்த ஆண்டு 2 பள்ளிகள்தான். இப்படி சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அனைத்து சமுதாயப் பள்ளிகளையும் சிறப்பாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

மீன்பிடித் துறைமுகம்

***16334—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, ஆசாத் நகரில் சுமார் 70 எண்ணம் கண்ணாடி நாரிழைப் படகுகள் மட்டுமே மீனவர்களால் மீன்பிடிப்புக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்படகுகளைக் கொண்டு மீனவர்கள் கோரையாற்றில் சுமார் 4 கிலோ மீட்டர் பயணித்து, முத்துப்பேட்டை காயல் மற்றும் உப்பங்கழியில் அதாவது, lagoon-*ல் மீன்பிடித்துத் திரும்புகின்றனர். இப்பகுதி காப்புக் காடுகளின்கீழ் அறிவிக்கப்பட்டு, வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும்,*